## அலகு 2

# வீடும் கூடும்



குடும்பம் வாழ வீடு வேண்டும். இவ்வீடே இரண்டாம் அலகின் மையக்கருத்து, மனிதர்களுக்கு மட்டுமல்ல பறவைகள் மற்றும் பிராணிகளும் வாழக் கூடு வேண்டு மல்லவா.

வீடு, கூடு, வீட்டிலுள்ளோரின் தொழில்கள் ஆகியவை பற்றிய கருத்துருவாக இவ்வலகில் உள்ள செயல்பாடுகள் உறுதுணையாக அமையும்.

1 முதல் 5 வரை எண்களை அறிமுகப்படுத்தி, அவற்றிற்கு இடையேயுள்ள தொடர்புகளைக் கண்டுபிடிக்கவும் எண்களை வரிசைப்படுத்தவும் எண்ணவும் தேவையான கற்றல் அனுப வங்கள் நல்கும் வண்ணம் இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**இப்பாடத்தின் வாயிலாக அறிமுகமாகும்...**

| | | |
|---|---|---|
| **சொற்கள்** | : | **எலி, வீடு, வடை, ஆமை** |
| **உயிரெழுத்துகள்** | : | **ஆ, ஏ** |
| **உயிர் மெய் எழுத்துகள்** | : | **ல, வ** |
| **ஒலித் துணைக் குறியீடுகள்** | : | **ை .ீ** |

| கருத்துகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் எழுத்துகள் / மொழிக்கூறுகள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| ❖ படங்களை உற்றுக் கவனித்து அதில் உள்ளவற்றைக் கூற இயலும். | படவாசிப்பு | ❖ படங்களைப் பார்த்து அதில் உள்ள கருத்துகள் / நிகழ்ச்சிகளைக் கூறுகிறார்கள். |
| ❖ குறிப்பிட்ட கருத்துப் பற்றி தனது அனுபவத்தை வெளியிடுவதன் வாயிலாகக் கலந்துரையாடலில் ஈடுபடலாம். | கலந்துரையாடல் | ❖ கலந்துரையாடலில் பங்கேற்றுத் தனது அனுபவத்தைக் கூறுகிறார்கள். |
| ❖ படத்தை சரியாக வரைந்து பொருத்தமான நிறம் நல்கும் போது அப்படம் உயிரோட்டம் உள்ளதாக அமையும். | படம் வரைந்து வண்ணம் தீட்டுதல் | ❖ படம் வரைந்து வண்ணம் தீட்டுகிறார்கள் |
| ❖ கேட்ட, பார்த்த அனுபவத்தின் வாயிலாகக் குறிப்பிட்ட சொற்களை இனம் காணாமல் வாசிக்க இயலும். | எலி, வீடு, ஆமை, வடை | ❖ சொற்களை இனம் காணாமல் வாசிக் கிறார்கள் |
| ❖ ஒலி, வரி வேறுபாட்டை உணர்ந்தால் குறிப்பிட்ட எழுத்தை இனம் காணலாம். | ஆ, வீ, | ❖ குறிப்பிட்ட எழுத்துக்களை இனம் கண்டு வாசிக்கிறார்கள். |
| ❖ ஒலித் துணைக்குறியீடுகள் எழுத்தின் வரி வடிவத்திலும் ஒலிப்பிலும் மாறுபாட்டை உருவாக்குகின்றன. | ை, ீ | ❖ ஒலித்துணைக் குறியீடுகளை இனம் கண்டு வாசிக்கிறார்கள் /எழுதுகிறார்கள். |
| ❖ தகுந்த எழுத்துகளை இணைத்து புதிய சொற்கள் உருவாக்கலாம். | ஆடு, ஆடை, எடை, கடை, தடை, தாடி | ❖ மொழி விளையாட்டுகளின் வாயிலாக |

| | | |
|---|---|---|
| ❖ பொருள் பொதிந்த சொற்கள் ஒன்று சேரும்போது புதிய வாக்கியம் உருவாகும். | வாசிப்பு | புதிய சொற்கள் உருவாக்குகிறார்கள். ❖ கற்ற எழுத்துக்கள் / சொற்கள் பயன்படுத்தி வரும் எளிய வாக்கியங்களைத் தானாக வாசிக்கிறார்கள். |
| ❖ மெட்டமைத்து பாடும் போது பாடலை கேட்க இனிமையாக இருக்கும். | பாடல் | ❖ பாடலை மெட்டமைத்துத் தனியாகவும் குழுவாகவும் பாடுகிறார்கள். |
| ❖ படங்களை உற்றுக் கவனித்து கதை சொல்ல இயலும். | படக்கதை | ❖ படங்களைப் பார்த்து கதை சொல்கிறார்கள். |
| ❖ மொழி விளையாட்டுகளில் ஈடுபடும் போது மனதிற்கு இன்பம் தருகிறது. | விடுகதை | ❖ விடுகதைக்கு விடை கூறுகிறார்கள். |

**சூழ்நிலையியல்**

| கருத்துகள் | செயல்திறன்கள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| ❖ மழை, வெயில், குளிர் போன்ற வற்றிலிருந்து வீடு நம்மைப் பாதுகாக் கிறது. | படத்தை உற்றுக்கவனித்தல், கலந்துரையாடல் | ❖ வீடுகளை உற்றுநோக்கி அவற்றின் தேவைகளைப் பற்றி கலந்துரையாடு கிறார்கள். |
| ❖ வெவ்வேறு தேவைகளுக்கேற்ப வீட்டில் வசதிகள் அவசியம். வீடு கட்டுவதற்குப் பலரது உதவி தேவைப்படும். | உற்றுக்கவனித்தல், வகைப்படுத்துதல், பொதுமுடிவுக்கு வருதல். | ❖ பல்வேறு அறைகளையும் அவற்றின் பயன்களையும் கூறுகிறார்கள். |
| ❖ வீட்டில் பல்வேறு உபகரணங் களைப் பல்வேறு தேவைகளுக் காகப் பயன் படுத்துகிறோம். | படங்களை உற்றுக்கவனித்தல், வகைப்படுத்துதல். | ❖ வீட்டு உபகரணங்களை அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையில் வகைப் படுத்துகிறார்கள். |

| | | |
|---|---|---|
| ❖ குடும்ப உறுப்பினர்களுக்கு வீட்டில் பல்வேறு பொறுப்புகள் உள்ளன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையைச் செய்கின்றனர். | படக்கதையை உற்றுக்கவனித்தல் | ❖ படக்கதையை வாசிக்கின்றான். தனது வீட்டில் உள்ளவர்களின் பொறுப்பு பற்றி கலந்துரையாடுகிறார்கள். |
| ❖ பலவகையான வீடுகள் உள்ளன. பிற உயிரினங்களின் வாழிடங்கள் மாறுபட்டவை. | படங்களை உற்றுக்கவனித்தல், கலந்துரையாடல் | ❖ பலவகையான வீடுகளை உற்றுநோக்கி அவற்றின் சிறப்புகளைக் கூறுகிறார்கள். |
| ❖ பறவைகள் முட்டையிடுவதற்கும், குஞ்சுகளை வளர்ப்பதற்கும் கூடுகட்டுகின்றன. | வாழிடங்களை, படங்களை உற்றுக்கவனித்தல். | ❖ பிற உயிரினங்களின் வாழிடங்களின் தேவை, அமைப்பு பற்றி கலந்துரை யாடுகிறார்கள். |
| **கணிதம்** | | |
| ❖ எண்ணிக்கையின் அடிப்படையில் பொருட்களை குழுக்களாக்கலாம். | படங்கள், பொருட்கள் | ❖ எண்ணிக்கையின் அடிப்படையில் பொருட்களை குழுக்களாக்குகின்றான். |
| ❖ பொருட்களை குழுவாக்குதலுக்கும் ஒப்புமைப்படுத்துவதற்கும் எண்ணறிவு அவசியமாகும். | எண்ணுதல் (1 முதல் 5 வரை) | ❖ ஒரே போல் இருக்கும் குழுக்களை எண்ணி எண்களை வாய்மொழியாக கூறுகிறார்கள். |
| ❖ ஒவ்வொரு எண்ணையும் குறிப்பிட்ட வடிவிலும் முறையிலும் எழுத வேண்டும். | எண்ணுரு | ❖ ஒவ்வொரு குழுவையும் எண்ணிப் பார்த்து எண்களை எழுதுகிறார்கள். |

# அலகு - 2 வீடும் கூடும்

**கதைக்களம்**

“அம்மா.. அம்மா... இங்கே பாருங்கள்! என் புத்தகம், சட்டை எல்லாம் கடித்து நாசம் செய்துவிட்டது.” லதா ஓடிவந்து தன் அம்மாவிடம் அழுதாள். “சே.. இந்த எலியின் தொல்லை தாங்க முடியவில்லை” அம்மா கூறினாள். “ இந்த எலியை எப்படியாவது வீட்டை விட்டுத் துரத்த வேண்டும்” அப்பா கூறினார். அவர்கள் எலியைத் துரத்தத் திட்டமிட்டனர். ஒரு நாள் நல்ல மழை! அன்று அந்த எலியை வீட்டிலிருந்து துரத்தினர்.

மழையில் நனைந்த எலி தங்க இடமின்றி அலைந்தது. ‘கோழிக்குக் கூடுண்டு; பசுவிற்குத் தொழுவம் உண்டு. ஆனால் எனக்கு மட்டும் இடம் இல்லை.’ எலி நினைத்தது. அது கோழியிடமும் பசுவிடமும் தங்க இடம் கேட்டது. யாரும் தங்க இடம் கொடுக்கவில்லை. எலி வருந்தியது.

கதையோட்டம்

பாடப்பகுதி

நிகழ்வு 1

“இனி யாரிடமும் கெஞ்சப் போவதில்லை. நானே வீடு கட்டப் போகிறேன். ” ‘அச்... அச்...’ மழையில் நனைந்து காய்ச்சல் வரும் போல் இருக்கிறதே! வீடு கட்டுவது எப்படி? யாரிடம் ஆலோசனை கேட்கலாம்?’ எலி ஆலோசித்தது.

எலி வீடு கட்டப் பலரும் உதவினர். ஆமை, காகம், ஆடு போன்றவை பல உணவுப் பொருட்களைக் கொண்டு வந்து தந்தன. எலி வீடு தயாரானது. எலிக்குப் பசி வந்தது. உணவுப் பொருட்களைத் தின்றது. எலி வீடு தரைமட்டம் ஆனது.

கதையோட்டம்

பாடப்பகுதி

நிகழ்வு 2

இரண்டு மூன்று நாட்கள் எலி தங்க இடமின்றி அலைந்தது. “ஐயோ.. பசி தாங்க முடியவில்லையே! நான் இறந்து விடுவேனோ!” எலி புலம்பியது. “இனி வேறு வழியேயில்லை. லதாவின் வீட்டிற்குள் நுழைய வேண்டியது தான்.’’ யாருக்கும் தெரியாமல் மெல்ல வீட்டிற்குள் நுழைந்தது. சமையலறைக்குள் புகுந்தது. அதோ..! வேறொரு எலி பாத்திரத்திற்குள் தலையைவிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தது. வந்த எலிக்குக் கோபம் வந்தது.

இரண்டு எலிகளுக்கும் சண்டை வந்தது. பாத்திரங்கள் உருண்டன. சத்தம் கேட்டு லதாவின் அம்மா ஓடி வந்தார். கையில் கிடைத்தக் கம்பை எடுத்து எலியை அடித்தார். அடி எலிமேல் படாமல் பானை மேல் பட்டது. பானை உடைந்து போனது. எலி தப்பி ஓடியது.

கதையோட்டம்

பாடப்பகுதி

நிகழ்வு 3

நிகழ்வு 4

கதையோட்டம்

பாடப்பகுதி

லதாவின் அம்மாவிடமிருந்து தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிய எலி ஒரு அலமாரிக்கு மேல் ஒளிந்து கொண்டது. 'சாப்பிட்டு மூன்று நாட்கள் ஆகிவிட்டன. இன்று எப்படியாவது சாப்பிட வேண்டும்.' எலி நினைத்தது. வீட்டில் எல்லோரும் வெளியே போகாமலா இருப்பார்கள்! எலி காத்திருந்தது.

ஒவ்வொருவராக வீட்டை விட்டு வெளியேறினர். அம்மா சாப்பாட்டை முடித்துவிட்டு பாத்திரங்களைக் கழுவினார். எலி காத்திருந்தது. ஒன்றும் கிடைக்கவில்லை. மாலையானது. அம்மா நெய்யப்பம் சுடத் தொடங்கினாள். வாயில் எச்சில் ஊறக் காத்திருந்தது எலி. அனைவரும் பாத்திரத்தைக் காலி செய்தனர். பாவம் எலி ஏமாந்து போனது.

நிகழ்வு 5

கதையோட்டம்

பாடப்பகுதி

இரவில் தூங்கச் சென்ற லதா எலியைப் பார்த்துவிட்டாள். "அப்பா.. எலி" என்றலறினாள். "எங்கே?" என்று கேட்டுக் கொண்டு அப்பா ஓடி வந்தார். அதைப் பார்த்த எலி துண்டைக் காணோம்... துணியைக் காணோம் என்று வெளியே ஓடியது. இரவு முழுவதும் வெளியிலேயே சுற்றியது. வீடுகட்டும் ஆசை அதற்கு மீண்டும் வந்தது. 'அன்று கட்டியது போல் அவசரமாகக் கட்டமாட்டேன். பல வீடுகளையும் பார்த்தபின்தான் வீடு கட்டுவேன்' எலித் தீர்மானித்தது.

பலரது வீடுகளையும் பார்க்க நினைத்த எலி மைதானத்திற்குச் சென்றது. அங்கு குமரன் என்ற சிறுவனும் நண்பர்களும் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் விளையாடுவதைப் பார்த்து ரசித்து அங்கேயே நின்றுவிட்டது.

நிகழ்வு 6

கதையோட்டம்

பாடப்பகுதி

பலரது வீடுகளைப் பார்த்துக் கொண்டே நடந்த எலி தேனிக்கள் பறந்து போவதையும் எறும்புகள் ஊர்ந்து போவதையும் பார்த்து அவர்களிடம் பேசத் தொடங்கியது.

எலி தேனீக்களிடமும் குருவிகளிடமும் எறும்புகளிடமும் அவர்களது வீடு/கூடு பற்றி விசாரித்தது. அவர்களது கூடுகளையும் பார்த்தது. இறுதியில் எலி தனக்கேற்றது வளைதான் என்று தீர்மானித்து வளை கட்டி வாழத் தொடங்கியது.

### வகுப்பிற்குச் செல்லும் முன்

- இவ்வலகின் கதைச் சுருக்கத்தை வாசித்துக் கதையை முழுமையாக உட்கொள்ள வேண்டும்?
- ஒரு நிகழ்வைச் சுவைபடக் கூறி நிறுத்திக் கலந்துரையாடி வட்டாரப் பாடப் புத்தகம் உருவாக்கத் திட்டமிட்டுள்ளீர்களா?
- வகுப்பில் பயன்படுத்த வேண்டிய சார்ட், படஅட்டைகள், எழுத்து மற்றும் சொல்லட்டைகள், படங்கள், வெட்டியெடுத்த எழுத்துகள், வெட்டியெடுத்த ஒலித் துணைக் குறியீடுகள், குச்சிகள், பொருட்கள் மற்றும் 1 முதல் 5 வரையுள்ள எண் அட்டைகள் தயாரித்து விட்டீர்களா?

## *பாடப்பகுதிக்குள் நுழையும் முன்..*

### தெரியுமா? தெரியாதா?

நோக்கம்:

☸ உயிரினங்களை இனம் கண்டு கூறுதல்

*தேவையான கற்றல் துணைக்கருவிகள்:*

- சில பறவைகள், பிராணிகளின் படங்கள் ஒட்டிய பட அட்டைகள்.



(பூனை, நாய் , பசு, ஆடு, ஆமை, காகம், கங்காரு, கோழி, நெருப்புக் கோழி, முயல், எலி)

"நான் சிலரை இங்கு அழைத்து வந்துள்ளேன். அவர்களை நீங்கள் பார்த்திருந்தால் 'தெரியும்' என்றும் பார்த்ததில்லை என்றால் 'தெரியாது' என்றும் சொல்லுங்கள்" என்று சொல்லிப் பட அட்டைகளை ஒவ்வொன்றாகக் காட்டுங்கள்.

குழந்தைகள் தெரியும் என்று சொன்ன பறவை, பிராணிகளின் பெயர்களைச் சொல்லிக் கொண்டே பல வண்ணங்களில் சார்ட்டில் எழுதுங்கள். பொருத்தமான வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி வாசித்துக் காட்டுங்கள்.

## *ஒலி எழுப்புங்கள்*

நோக்கம்:

☸ உயிரினங்களின் ஒலி வேறுபாட்டை அறிதல்.

குழந்தைகளை ஒலி எழுப்புவதற்கு ஏதுவான சில பறவைகள் மற்றும் பிராணிகளின் பட அட்டைகளை மேசைமீது கவிழ்த்து வையுங்கள். குழந்தைகள் ஒவ்வொருவராக வந்து பட அட்டைகளை எடுக்கட்டும். தங்களுக்குக் கிடைத்த பறவை மற்றும் பிராணிகளின் ஒலி எழுப்பட்டும்.



## போலச் செய்யும் விளையாட்டு

நோக்கம்:

- உயிரினங்களின் அசைவுகளை நடித்துக் காட்டுதல்

''காகம் பறப்பதைப் பார்த்தாயா?'' என்று கேளுங்கள். குழந்தைகள் "இது போல.. இது போல..." என்று கூறிப் பறப்பது போல் கைய சைத்துக் கொண்டே காகத்தின் ஒலி எழுப்பட்டும். பறப்பது போல் நடிக்கட்டும்.

- கோழி கூவுவதைக் கேட்டாயா?
- நாய் குரைப்பதைக் கேட்டாயா?
- ஆடு கத்துவதைக் கேட்டாயா?.... என்று கேட்டு நடிக்க வாய்ப்பளியுங்கள்.

## *பிடித்தது எது? பிடிக்காதது எது?*

நோக்கம்:

- காரண காரியத் தொடர்புடன் சிந்தித்தல்.

- உனக்குப் பிடித்த பறவை/ பிராணி எது?
- உனக்குப் பிடிக்காத பறவை/ பிராணி எது?
- காரணம் என்ன?

என்று கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

## எனக்குப் பிடிக்காதது

நோக்கம்:

- **எலி** என்ற சொல் அறிமுகம்




"உங்களைப் போன்று எனக்குப் பிடிக்காத ஒன்று உள்ளது. அது எது தெரியுமா?'' என்று கேளுங்கள். பின்.. ''எனக்குப் பிடிக்காதது... எனக்குப் பிடிக்காதததது..." என்று இழுத்து **'எலி'** என்று எழுதிய மின்னலட்டையைக் காட்டுங்கள். குழந்தைகள் பார்த்து வாசிக்கட்டும்.

யாரும் எலி என்று கூறவில்லையெனில் எலிப்படம் ஒட்டிய அட்டையைக் காட்டுங்கள். எழுத்தட்டையையும் பட

அட்டையையும் மாறி மாறிக் காட்டி **எலி** என்ற சொல்லை குழந்தைகள் இனம் காண வாய்ப்பளியுங்கள்.



### *கலந்துரையாடல்*

நோக்கம்:

- தன் அனுபவத்தைக் கூறுதல்

“எனக்கு எலியை பிடிக்காதது ஏன் என்று சொல்ல முடியுமா?” என்று கேளுங்கள்.

குழந்தைகள் தமக்குத் தெரிந்தவற்றைச் சுதந்திரமாகக் கூற வாய்ப்பளியுங்கள்.

பிறகு,“ என்னைப் போன்று எலியைப் பிடிக்காதவர்கள் நிறையப் பேர் உள்ளனர். ஒரு வீட்டில் எலி செய்த அட்டகாசத்தைப் பற்றிக் கூறட்டுமா?” என்று தொடங்கிக் கதையோட்டத்தைக் கூறத் தொடங்குங்கள். கதையோட்டத்தைச் சுவைபடக் கூறுங்கள்.

## நிகழ்வு - 1
# இடம் தருவாயா?

### *கதையோட்டம்*

நோக்கம்:

- குழந்தைகளின் கவனத்தை ஒருமுகப்படுத்த
- பாடப்பகுதிக்குள் ஆர்வத்துடன் நுழைய ஆயத்தப்படுத்துதல்

நிகழ்வு-1 ற்கான கதையோட்டத்தை ஆர்வத்தைத் தூண்டும் விதம் சொல்லுங்கள். அதன் பிறகு,



- வீட்டிலிருந்து துரத்தப்பட்ட எலி என்ன செய்திருக்கும்?
- அதற்கு தங்கும் இடம் கிடைத்திருக்குமா?
- எலி யாரிடமெல்லாம் தங்க இடம் கேட்டிருக்கும்?
- மழையில் எலி நனைந்திருக்குமா?

போன்ற கேள்விகள் கேட்டுக் குழந்தைகளோடுக் கலந்துரை யாடுங்கள்.

### *வட்டாரப் பாடப்புத்தகம்*

நோக்கம்:

- ஊக வாசிப்பு

பாடப்பகுதியில் வரும் சொற்கள், முன்னர் கற்ற சொற்கள், வாக்கியங்கள் ஆகியவற்றைக் குழந்தைகள் கூறினால், அவற்றைச் சார்ட்டில் எழுதுங்கள். இவ்வாறு உருவான வட்டாரப் பாடப் புத்தகத்தைக் குழந்தைகள் வாசிக்க,.

சில வரிகளைச் சுட்டிக் காட்டி

- ♦ இது யார் கூறியது?
- ♦ நீங்கள் கூறிய சொல்லை/வாக்கியத்தை வாசிக்க முடியுமா?

என்பது போன்ற வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி வாசிக்க வாய்ப்பளியுங்கள்.

## *ஆசிரியை வாசித்துக் காட்ட....*

“நான் வாசிக்கிறேன். வாசிக்கும் வரியைச் சொன்னது யார் என்று நீங்கள் சொல்ல வேண்டும்.” என்று சொல்லி வாசித்துக் காட்டலாம்.

**பாடப் பகுதிக்குள்...**

நோக்கம்:

- ☸ பாடப் பகுதியை ஊகமாக வாசித்தல்

- ♦ யார் கூறியது பாடப்பகுதியில் வந்துள்ளது?

என்றோ,

- ♦ உண்மையில் என்ன நடந்தது என்று பார்ப்போமா?

என்றோ கூறிப் பாடப்பகுதியை வாசிக்கத் தூண்டுங்கள்.

குழந்தைகள் வட்டாரப் பாடத்தில் வந்துள்ள சொற்கள்/ வாக்கியங்கள் ஆகியவற்றைக் கண்டுபிடித்து வாசிக்க முயற்சி செய்யட்டும்.

## *வாசிப்பதற்குச் சிரமப்பட்டால்...*

- ♦ அக்கா என்ற சொல் பாடப்பகுதியில் எத்தனை முறை வந்துள்ளது? வட்டமிடுங்கள். (இச் சொல் முதல் அலகில் கற்றது)
- ♦ **எலி** என்ற சொல் எத்தனை முறை வந்துள்ளது? வட்டமிடுங்கள். (வட்டாரப் பாடத்தின் வாயிலாக இனம் கண்டது)

என்று கூறி அச் சொற்களை இனம் காண உதவுங்கள்.

இக்கேள்விகளின் வாயிலாகத் தேடல் நடத்தும் போது பல சொற்களை இனம் காணாமலும் சில சொற்களை இனம் கண்டும் வாசிக்க முயற்சி செய்யட்டும்.

வாசிக்க முடியுமா?

“வழவழ கொழகொழ வாழைப்பழம்’
‘ஏழுமலை வீட்டில் பழுத்த பழம்’
‘ஏழு பழம் எனக்கு ஏழு பழம் உனக்கு’
‘வழவழ கொழகொழ வாழைப்பழம்.”

குழந்தைகள் இனம் காணாமாலும் இனம் கண்டும் வாசிக்க முயற்சி செய்த பின் நீங்கள் பாடப்பகுதியை வாசித்துக் காட்டுங்கள். ஓரிரு முறை வாசித்த பின் வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி வாசியுங்கள். அதன் பிறகு குழந்தைகள் தாமாக வாசிக்க முயற்சி செய்யட்டும்.

## *பட வாசிப்பு*

நோக்கம்:

- ☸ படங்களை வாசித்துப் புரிந்துகொள்ளுதல்.

பக்கம் 22, 23 லுள்ள படங்களைப் பார்க்கட்டும். குழந்தைகள் தாமாகக் கண்டறிந்து கூறட்டும். சில வினாக்களைக் கேட்டுப் படவாசிப்பு நடக்க உதவலாம்.

- ♦ படத்தில் என்னென்ன மரங்கள் உள்ளன?
- ♦ என்னென்ன பிராணிகள் உள்ளன?
- ♦ வீட்டிற்கு உள்ளே இருப்பது யார்?
- ♦ வீட்டிற்கு வெளியே இருப்பது யார்?
- ♦ எலி யாரிடம் பேசுகிறது?
- ♦ எலி பசுவிடம் என்னென்ன கேட்டிருக்கும்?

போன்ற பல்வேறு வினாக்களைக் கேட்டுக் குழந்தைகளைப் படவாசிப்பு நடத்தத் தூண்டலாம்.

## *கலந்துரையாடுங்கள்*

நோக்கம்:

- ☸ கலந்துரையாடலில் பங்கேற்கிறான்

பாடப்பகுதியிலுள்ள வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள். கலந்துரையாடலில் அனைவரும் பங்கேற்கிறார்களா என்பதைக் கவனியுங்கள். அவ்வப்போது முழுமையான மற்றும் தொடர் மதிப்பீட்டுப் பதிவேட்டில் பதிவு செய்யுங்கள்.

## *இவர்கள் வசிப்பது எங்கே?*

நோக்கம்:

- ☸ பிராணிகளின் வாழிடங்களை அறிதல்

சொல்லைப் படத்துடன் இணைத்து வேறொரு பொருத்தமான படத்துடன் இணைக்க வேண்டும். சொல்லைப் படத்துடன் இணைக்கும் பொழுது இனம் காணாமலேயே புதிய சொல்லை வாசிக்கின்றனர்.

### *பட வாசிப்பு*

**உதாரணமாக...**




**முழுமையான தொடர் மதிப்பீடு :**

நாம் முக்கியத்துவம் அளித்துள்ள அடைவுகளை அடையத் தேவையான திறன்களை குழந்தைகள் பெற்றுள்ளார்களா என்று தொடர்ந்து மதிப்பிட வேண்டும். அம்மதிப்பீடு தொடர் கற்றலுக்கு வழிகாட்டியாக அமையும். எனவே முழுமையான தொடர் மதிப்பீடு நடத்த வேண்டியது கட்டாயமாகிறது.

### வாசிப்போம்

நோக்கம்:

- இனம் காணாமலேயே வாக்கியங்களை வாசித்தல்

................. **முட்டை தரும்** என்று சொல்லுங்கள். குழந்தைகள் **கோழி முட்டை தரும்** என்று கூறுகிறார்களா என்று கவனியுங்கள். அதன் பின் படத்தையும் சொற்களையும் சேர்த்து வாசிக்க முயற்சி செய்யட்டும். பின் தங்கிய குழந்தைகளுக்குச் சில குறிப்புகள் வழங்கி வாசிக்கச் செய்ய செய்ய வேண்டும்.

### வாசியுங்கள், வட்டமிடுங்கள்

நோக்கம்:

- சொற்களை இனம் காணுதல்

குழந்தைகள் பல சொற்களை இனம் காணாமலும் இனம் கண்டும் வாசித்த பின் மீண்டும் பாடப் பகுதிக்குள் செல்லுங்கள். குழந்தைகள் பாடப்பகுதியை வாசித்துப் பார்க்கட்டும். வாசித்துப் பார்த்த பின் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலாக அமையும் சொற்களைக் குழந்தைகள் வட்டமிடட்டும்.

### சிந்தனைக்கு...

நோக்கம்:

- தன் அனுபவத்தைக் கூறுதல்

பாடப்பகுதியிலுள்ள படங்களையும் வினாக்களையும் பயன் படுத்திக் குழந்தைகளுடன் கலந்துரையாடுங்கள்.

இந்த அலகில் 5 நிகழ்வுகள் உள்ளன. ஒவ்வொரு நிகழ்வும் முடிவடையும் போது கீழ்க்காணும் வினாக்கள் கேட்டுப் பதிலை சார்ட்டுல் எழுதி உருவாகும் கதைப்புத்தகம் ( Evolving Text)

1. லதாவின் வீட்டிலிருந்து எப்பொழுது எலியை விரட்டினார்கள்?
2. மழையில் நனைந்த எலி என்ன செய்தது?
3. எலிக்குத் தங்க இடம் கிடைத்ததா ?

**சார்ட் 1**

நல்ல மழையில் வீட்டிலிருந்து எலியை விரட்டினார்கள்.

பசு, கோழி, ஆடு இவர்களிடம் தங்க இடம் கேட்டது.

தங்க இடம் கிடைக்கவில்லை.

### படவாசிப்பு

ஆயிரம் சொற்கள் சேர்ந்து கூறும் செய்தியை ஒரு படம் சொல்லிவிடும் என்று சொல்வார்கள்

ஒரு படத்தைப் பார்த்து பலரும் பல விதமான அர்த்தம் கற்பிக்கவும் வாய்ப்புண்டு. அவர்களது கருத்து அவர்களது உள்ள ஓட்டத்தை வெளிப்படுத்துவதாக அமைவதைக் காணலாம்.

# நிகழ்வு - 2
# எலி வீடு

## கதையோட்டம்

நோக்கம்:

- குழந்தைகளின் கவனத்தை ஒருமுகப்படுத்த

கதைக்களத்திலிருந்து நிகழ்வு இரண்டிற்கான கதையோட்டத்தை ஆர்வமூட்டும் விதத்தில் கூறுங்கள். அதற்கு முன்னதாக நிகழ்வு ஒன்றின் கதைச் சுருக்கத்தைச் சுருக்கமாகக் கூறி நினைவுபடுத்துங்கள்.

அதன் பிறகு கீழ்க்காணும் வினாக்களைக் கேட்டுக் குழந்தைகளோடுக் கலந்துரையாடுங்கள்.

- எலி வீடு கட்ட நினைத்ததேன்?
- எலி வீடு கட்டியிருக்குமா?
- எலி எப்படி வீடு கட்டியிருக்கும்?
- வீடு கட்ட எலிக்கு யார் யார் உதவியிருப்பார்கள்?

## வட்டாரப் பாடம்

நோக்கம்:

- ஊக வாசிப்பு

குழந்தைகள் கூறுவதன் அடிப்படையில் வட்டாரப் பாடம் உருவாக்குங்கள்.

குழந்தைகள் ஒன்றும் கூறவில்லையெனில் சில குறிப்புகள் கொடுத்துக் கூற வாய்ப்பளியுங்கள்.

### உதாரணமாக...

எலி வீடு கட்ட யார் யார் உதவியிருப்பார்கள்? என்ற வினாவிற்குக் குழந்தைகள் பதிலளிக்க வில்லையெனில்,

- ஓட்டு வீட்டை முதுகில் சுமப்பவன்
- எலியின் எதிரி
- பால் தரும் பசுவல்ல
- கருப்பு நிறப்பறவை

போன்ற குறிப்புகள் நல்கி குழந்தைகள் கூற வாய்ப்பளியுங்கள்.

### எலி வீடு

நோக்கம்:

- ஊக வாசிப்பு
- வாசிப்பதைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல்




''யார் கூறியது சரி என்று பார்ப்போமா?'' என்று கூறி பாடப்பகுதிக்குள் செல்லுங்கள்.

### எத்தனை முறை?

நோக்கம்:

- சொற்களை இனம் காணுதல்
- எண்ணுதல்




- பாடப்பகுதியில் எலி எத்தனை முறை வந்துள்ளது?
- பாடப்பகுதியில் வீடு எத்தனை முறை வந்துள்ளது?
- பாடப்பகுதியில் வடை எத்தனை முறை வந்துள்ளது?
- பாடப்பகுதியில் ஆமை எத்தனை முறை வந்துள்ளது?

போன்ற வினாக்களைக் கேட்டு குழந்தைகள் எலி, வீடு, வடை, ஆடை போன்ற சொற்களை இனம் கண்டு வட்டமிட வாயப்பளியுங்கள்.

### எழுத்துகளை இணைத்துச் சொல் கூறுவோம்

நோக்கம்:

- எழுத்துகளைச் சேர்த்துச் சொல் உருவாக்குதல்
- சொற்களை வாசித்தல்




சொற்களைக் குழந்தைகள் இனம் கண்ட பின் எழுத்தட்டைச் செயல்பாடுகளின் வாயிலாக எழுத்துக்களை இனம் காண வாய்ப்பளியுங்கள். அவ்வேவைளையில் எழுத்துகளைகத் தெளிவாக உச்சரித்துக் காட்ட வேண்டும்.

**மீண்டும் வாசிக்க...**

நோக்கம் :

- வாசிப்பதைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்



வாசிப்பு உத்திகள் பயன்படுத்திப் பாடப்பகுதியை மீண்டும் வாசிக்கத் தூண்டுங்கள். நீங்களும் பாடப் பகுதியை நிறுத்தி மெதுவாகக் குழந்தைகளுக்குப் புரியும் வண்ணம் வாசியுங்கள்.

### கலந்துரையாடல்

நோக்கம்:

- ☸ தன் சொந்த அனுபவத்தைக் கூறுதல்

- ♦ நமக்கு வீடு எதற்கு?
- ♦ உங்கள் வீட்டில் எத்தனை அறைகள் உள்ளன?
- ♦ பிராணிகளுக்கும் பறவைகளுக்கும் வீடு உண்டா?

போன்ற வினாக்கள் வாயிலாகக் குழந்தைகளோடு கலந்துரை யாடுங்கள்.

### வரைவோம் ; நிறம் கொடுப்போம்

நோக்கம்:

- ☸ எழுத்து முன் பயிற்சி
- ☸ நுண்தசைப்பயிற்சி

குழந்தைகள் சரியாக எழுதுவதற்கான முதற்பயிற்சியே படம் வரைதல். அவர்கள் கோட்டைவிட்டு வெளியே செல்லாமல் வரைகிறார்களா என்பதையும் பொருத்தமான நிறம் கொடுக் கிறார்களா என்பதையும் கவனிக்க வேண்டும். அதன் அடிப்படையில் மதிப்பீடு செய்து முழுமையான மற்றும் தொடர் மதிப்பீட்டுப் பதிவேட்டில் குறிப்பிட வேண்டும்.

### கண்டுபிடியுங்கள்

நோக்கம்:

- ☸ மொழி விளையாட்டுகளில் ஈடுபடுதல்
- ☸ எழுத்துகளைப் பயன்படுத்திச் சொல் உருவாக்குதல்

இந்தச் செயல்பாட்டை நீங்களே வாசித்துக் காட்டுங்கள். எ.கா : **ஆடை** என்ற சொல்லில் உண்டு **வாடை** யில் இல்லை.

ஆடையிலும் வாடையிலும் **டை** என்ற எழுத்துண்டு. வாடையில் இல்லாமல் ஆடையில் மட்டும் இருப்பது **ஆ** மட்டுமே. எனவே முதல் எழுத்து **ஆ**.

மைனாவில் உண்டு; சைனாவில் இல்லை என்றால் **சை, னா** இல்லை. மீதியுள்ள எழுத்து **மை** மட்டுமே.

அப்படியானால் இரண்டாம் எழுத்து **மை**

எனில் சொல் : **ஆமை**



**கவனிக்க...**

பக்கம் 28- ல் முன்னர் கற்ற ஒலித் துணைக் குறியீட்டைக் ் . ா. ி கவ்விக் கொண்டு புறா பாடப் புத்தகத்திற்குள் நுழைகிறது. அப்படியென்றால் இந்த அலகில் ஏதோ புதிய உயிர்மெய் யெழுத்துகள் அறிமுகமாகியுள்ளன. அந்த எழுத் துகளில் இந்து ஒலித் துணைக் குறியீட்டைப் பயன்படுத்த வேண்டும் என்று பொருள்.

**ல - ல் ,லா , லி**

**வ - வ் , வா, வி**

என்று குழந்தைகளுக்கு ஒலி மற்றும் வரிவடிவ வேறுபாட்டை உணர்த்த வேண்டும்.

அடுத்த செயல்பாட்டைக் குழந்தைகளே கண்டுபிடிக்க முயற்சி செய்யட்டும். வடை என்ற சொல்லைக் கண்டுபிடித்துச் சொன்னால் பாராட்ட மறந்துவிடாதீர்கள்.

## புதிய சொற்கள் உருவாக்குதல்

நோக்கம்:

- ☸ கண்டுபிடியுங்கள்

- ♦ கற்ற எழுத்துகளைப் பயன்படுத்திப் புதிய சொற்கள் உருவாக்குதல்

இது வரை கற்ற எழுத்துக்களுடன் நடுவில் உள்ள எழுத்தைச் (டை) சேர்த்துப் புதிய சொற்கள் உருவாக்கி எழுதத் தூண்டுங்கள். அவற்றை வாசிக்கவும் வாய்ப்பளியுங்கள்.

| புதிய ஒத்துணைக் குறியீடுகள் | கற்ற உயிர் மெய் எழுத்துகள் | உருவாகும் புதிய உயிர் மெய் எழுத்துகள் | |
|---|---|---|---|
| ீ | ப | பீ | பை |
| ை | ம | மீ | மை |
| | க | கீ | கை |
| | த | தீ | தை |
| | ட | டீ | டை |
| | வ | வீ | வை |

## வாசியுங்கள்
## என்னால் வாசிக்க முடியும்

நோக்கம்:

- ☸ கற்ற எழுத்துகளைப் பயன்படுத்தி உருவாகும் புதிய சொற்களை / வாக்கியங்களை வாசித்தல்

இதுவரைக் கற்ற எழுத்துக்களைப் பயன்படுத்தி உருவான சொற்களும் வாக்கியங்களும் இங்கு தரப்பட்டுள்ளன. குழந்தைகள் தானாக ஆசிரியையின் உதவியின்றி இவற்றை வாசிக்க வேண்டும். எந்தக் குழந்தை வாசிக்க வில்லையோ அவள் எழுத்துக்களை இனம் காணவில்லை என்று புரிந்து கொள்ளலாம். அவ்வாறு பின் தங்கிய நிலையிலுள்ள குழந்தைகளுக்கு எழுத்தட்டை/ சொல்லட்டைகளைப் பயன்படுத்தி மேலும் செயல்பாடுகள் நல்கி அவளையும் வாசிக்கும் குழந்தையாக மாற்ற வேண்டும்.

1. தங்க இடம் கிடைக்காத எலி என்ன செய்தது?
2. எலிக்கு உதவியவர்கள் யார் யார்?
3. எலி வீடு கட்ட பயன்படுத்திய பொருட்கள் எவை?
4. பசி வந்த எலி என்ன செய்தது?

**சார்ட் 2**

வீடு கட்ட நினைத்தது.

ஆமை, ஆடு, காகம் உதவியது.

பப்படம், வடை, ஆப்பிள் வைத்து வீடு கட்டியது.

வீட்டைத் தின்றது.

# நிகழ்வு - 3

# எலிச் சண்டை

***கண்டுபிடியுங்கள்***



நோக்கம்:

- மொழி விளையாட்டுகளில் ஈடுபடுதல்

ஆர்வமூட்டும் விதத்தில் நிகழ்வு 2 வரையுள்ள கதைச் சுருக்கத்தைக் கூறிய பின், நிகழ்வு 3 ற்கான கதையோட்டத்தைக் கூறுங்கள். கதையோட்டத்தை உணர்ச்சிப் பூர்வமாகக் கூற முயற்சிசெய்யுங்கள். அதன் பிறகு முன் நிகழ்வுகளில் செய்தது போல்

- அடுத்து என்ன நடந்திருக்கும்?
- எலிக்குக் கோபம் வந்தது ஏன்?
- வேறொரு எலியைப் பார்த்ததும் இந்த எலி என்ன செய்திருக்கும்?



போன்ற வினாக்களைக் கேளுங்கள். தேவைக்கேற்ப வட்டாரப் பாடம் உருவாக்குங்கள்.

- வட்டாரப் பாடம் வாயிலாகக் குழந்தைகளுடன் உரையாடுங்கள்.
- சொற்களை இனம் காணும் செயல்பாடுகளை நடத்துங்கள்.
- மீண்டும் மீண்டும் சொற்களைக் காண வாய்ப்பளியுங்கள்.
- வாசிப்புப் பயிற்சி அளியுங்கள்.



***எலிச் சண்டை***

நோக்கம்:

- பாடலை இசையோடு பாடுதல்
- தனியாகவும் குழுவாகவும் பாடுதல்



- நீங்கள் கூறியது சரிதானா ?
- அடுத்து என்ன நடந்திருக்கும் என்று பார்ப்போமா?

என்று கூறிப் பாடலைக் குழந்தைகள் தாமாக வாசிக்க வாய்ப்பளியுங்கள்.

- எலி என்ற சொல் பாடலில் எத்தனை முறைவந்துள்ளது? எண்ணிப்பாருங்கள்.

(ஐந்து வரையுள்ள எண்ணறிவை பொருட்களைக் குழுக்களாக்கி நல்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.)

பாடலை இசையோடு பாடுங்கள்.

வகுப்பறையிலுள்ள குழந்தைகள் மொத்தமாக, குழுக்களாக, தனியாக இசையோடு பாட வாய்ப்பளியுங்கள். செய்கைப் பாடலாகப் பாடத் தூண்டுங்கள்.

## *குழுவில் சேராதது எது? வட்டமிடுங்கள்*

நோக்கம் :

- நுண்ணறிவுப் பயிற்சி

குழந்தைகளின் சிந்தனையைத் தூண்ட உதவும் செயல்பாடிது. கொடுக்கப்பட்ட படங்கள், சொற்கள், எழுத்துகள் போன்றவற்றைப் பகுப்பாய்வு செய்து ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிந்து தனியாக உள்ளதை வட்டமிட வாய்ப்பளியுங்கள். குழந்தை எதில் வட்டமிடுகிறது என்பதை விட வட்டமிட்டதற்கான காரணத்தை விளக்குவதை மதிப்பிடுங்கள்.

## *அடுத்தது என்ன? எழுதுங்கள்*

நோக்கம்:

- கற்ற ஒலித் துணைக் குறியீடுகளைப் புதிய சூழலில் பயன்படுத்துகிறார்கள்.

குழந்தைகள் கற்ற ஒலித் துணைக் குறியீடுகளைப் புதிய சூழலில் பயன்படுத்துகிறான் என்பதை உறுதி செய்யும் செயல்பாடாகும். இதைக் குழந்தைகள் தாமாகச் செய்யத் தூண்டுங்கள்.

## *வட்டமிடுங்கள் ; எழுதுங்கள்*
## *வரையுங்கள் ; எழுதுங்கள்*

நோக்கம்:

- தான் கற்றதை வேறொரு சூழலில் பயன்படுத்துதல்
- பெற்றோரின் பங்களிப்பிற்கு வாய்ப்பளித்தல்

இவ்விரு செயல்பாடுகளையும் வீட்டுச் செயல்பாடுகளாகச் செய்து வரத் தூண்டுங்கள். வீட்டுச் செயல்பாடுகளைக் கண்டிப்பாக மதிப்பிட வேண்டும்.

**எ. கா:** ஆடு, ஆமை, காகம், வடை

குழந்தை -1 வடையில் வட்டமிடுகிறது என்று வைத்துக் கொள்வோம்.

அவன் கூறும் உத்தி: வடை உயிரற்றது.

குழந்தை - 2 காகம் என்ற சொல்லை வட்டமிடுகிறது.

அவள் கூறும் உத்தி: காகம் என்ற சொல்லில் மட்டுமே **ம்** என்ற மெய்யெழுத்து வந்துள்ளது.

ஆரம்பகட்டத்தில் இவ்விரு குழந்தைகளும் பாராட்டுக்குரியவர்களே!

## *எந்தப் பொருள் ? எந்த அறை?*

நோக்கம்:

- வகைப்படுத்துதல்

எல்லாக் குழந்தைகளிடமும் பாடப்புத்தகத்தில் கூறியுள்ள வண்ணப் பென்சில்கள் உள்ளனவா என்று உறுதிப்படுத்திய பின் இச்செயல்பாட்டைச் செய்யுங்கள்.

1. உங்கள் வீட்டில் என்னென்ன பொருள்கள் உள்ளன? பத்து எண்ணுவதற்குள் யார் மிக அதிகமான பொருள்களின் பெயர்களைச் சொல்கிறார்கள் என்று பார்ப்போமா? என்று சவால் விட்டு இரண்டோ மூன்றோ குழந்தைகளைப் போட்டிக்குத் தேர்ந்தெடுங்கள். 1 முதல் 5 வரை எண்ண ஒரு குழந்தையைத் தேர்ந்தெடுங்கள்.

போட்டி நடத்துங்கள். குழந்தைகள் கூறும் பொருள்களைக் கரும்பலகை / சார்ட்டில் எழுதுங்கள். வெற்றி பெற்ற குழந்தைகளைப் பாராட்ட மறந்துவிடாதீர்கள்.

2. உங்கள் வீட்டில் என்னென்ன அறைகள் உள்ளன? என்று கேட்டு வீட்டின் படம் வரைந்து அறைகளின் பெயர்களை எழுதுங்கள்.

3. கரும்பலகையில் குழந்தைகள் கூறிய பொருள்களின் பட்டியல் உள்ளது. வீட்டிலுள்ள அறைகளின் பெயர்களும் உள்ளன. குழந்தைகள் கூற வாயப்புள்ள பொருள்கள்:

**சவால் : 1**

> “நான் கூறும் பொருளை வட்டமிடமுடியுமா?”

**சவால் : 2**

> “நான் குறிப்பிடும் பொருள் எந்த அறையில் இருக்கும் என்று கோடிமுத்துக் காட்ட முடியுமா?”

என்று சவால் விட்டு குழந்தைகள் பொருள்களின் பெயர்களை இனம் காணவும் அப்பொருள் எந்த அறையில் இருக்கும் என்று கோடிமுத்துக் காட்டவும் வாய்ப்பளியுங்கள்.

தொடர்ந்து பாடப் புத்தகத்திலுள்ள செயல்பாட்டை குழந்தைகளே செய்ய வாய்ப்பளியுங்கள்.

**விடுகதைகள்**

1. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள். அது என்ன?
2. ஒரே பெட்டிக்குள் இரு தைலம். அது என்ன?
3. பந்தலிலே பச்சைப் பாம்பு. அது என்ன?
4. என்னை வெட்டினால் நீ அழுவாய். நான் யார்?
5. நான் கரைந்தால் நீ வெளுப்பாய். நாம் யார்?

1. வீடில்லாத எலி என்ன செய்தது?
2. சமையலறையிருந்த எலிகள் என்ன செய்தன?
3. சத்தம் கேட்டு வந்த அம்மா என்ன செய்தாள்?
4. எலி சிக்கியதா?

**சார்ட் 3**

மீண்டும் வீட்டிற்குள் நுழைந்தது.

பாத்திரங்களை உருட்டியது.

அம்மா கம்பை எடுத்து விரட்டினாள்.

எலி தப்பி ஓடி தப்பித்தது.

## நிகழ்வு - 4
# ஏமாந்த எலி

### கதையோட்டம்

ஆர்வமூட்டும் விதத்தில் நிகழ்வு ஒன்று முதல் மூன்று வரையுள்ள கதைச் சுருக்கத்தைக் கூறிய பின் நிகழ்வு 4 இன் கதையோட்டத்தைக் கூறுங்கள். அதன் இறுதியில் கீழ்க்காணும் வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

- வீட்டிலுள்ளவர்கள் வெளியே சென்றார்களா?
- எலிக்கு உணவு கிடைத்திருக்குமா?

உரையாடலுக்குப் பின் வட்டாரப் பாடம் உருவாக வேண்டும். அதனடிப்படையில் கலந்துரையாட வேண்டும். வட்டாரப் பாடத்தைப் பாடப்பகுதியோடு மீண்டும் மீண்டும் ஒப்பிட வேண்டும். எனவே வட்டாரப் பாடத்தைச் சார்ட்டில் தயாரித்துக் கொள்வது நல்லது. சிறு சிறு ஒப்பிடுதலுக்குக் கரும்பலகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

### ஏமாந்த எலி

நோக்கம் :

- படங்களைப் பார்த்துக் கதை கூறுதல்

குழந்தைகள் படக் கதையைப் பார்க்கப்/ படிக்கப் போதுமான அவகாசம் கொடுங்கள். ஒவ்வொரு படத்திலும் என்னென்ன உள்ளன என்று கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

**படம் - 1**

- படத்தில் இருப்பது யார்?
- எங்கிருக்கிறார்?
- என்ன செய்கிறார்?

**படம் - 2**

- அம்மா கையில் இருப்பது என்ன?
- யாரிடம் கொடுக்கிறார்?

**படம் - 3**

- இது யார் ?
- எங்கே போகிறார்?
- என்ன வேலை செய்கிறார்?

**படம் - 4**

- குழந்தை எங்கே போகிறாள்?
- எலி என்ன நினைத்திருக்கும்?

**படம் - 5**

- அம்மா என்ன செய்கிறார்?

**படம் - 6**

- படத்தில் யார் யார் இருக்கிறார்கள்?

**படம் - 7**

- படத்தில் யாரெல்லாம் இருக்கிறார்கள்?
- அவர்கள் என்ன செய்கிறார்கள்?

**படம் - 8**

- எலி என்ன நினைத்திருக்கும்?

போன்ற சிறு சிறு வினாக்கள் வாயிலாகக் குழந்தைகள் படக்கதையை வாசிக்கத் தூண்டுங்கள்.

படக்கதையிலுள்ள கதையை ஊகித்துச் சொல்லட்டும். குழந்தைகள் படக் கதையை அப்படியே சொல்ல வேண்டும் என்று நினைக்கக் கூடாது. இங்கு குழந்தையின் உற்றுநோக்கும் திறனையும் சரளமாக கதை சொல்லும் திறனையும் அளக்க வேண்டும்.

ஓரிரு குழந்தைகள் கதை கூறிய பின் நீங்கள் கதையைச் சுவைபடச் சொல்ல வேண்டும்.

## பட்டியலிடுதல்

நோக்கம்:

- ☸ வீட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலை உண்டு. வீட்டிலும் அவர்களுக்கான பொறுப்புகள் உள்ளன.




படக்கதையை வாசித்தபின் கீழ்க்காணும் வினாக்களைக் கேட்டுக் குழந்தைகளிடம் உரையாடுங்கள்.

- அம்மா என்னென்ன வேலைகள் செய்கிறார்?
- அப்பாவின் வேலை என்ன?
- அண்ணனின் வேலை என்ன?
- லதா எங்கே போகிறாள்?

தொடர்ந்து,

- உங்கள் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?
- அவர்கள் என்ன வேலை செய்கின்றனர்?

என்று கேட்டுக் கீழ்க்காணும் பட்டியல் உருவாக்குங்கள்.

## விடுகதைக்கு விடை கூறுங்கள்

நோக்கம் :

- ☸ மொழி விளையாட்டுக்களில் ஈடுபடுதல்
- ☸ கற்ற சொற்களை எழுதுதல்

- இதுவரைக் கற்ற சொற்கள் விடையாக வரும் எளிய விடுகதைகள் தயாரியுங்கள்.
- அவற்றைப் பயன்படுத்தி வகுப்பில் விடுகதைப் போட்டி நடத்துங்கள். (சொல்லுதல், எழுதுதல்)
- தொடர்ந்து பாடப்பகுதியிலுள்ள விடுகதையைக் கேளுங்கள். எத்தனை குழந்தைகள் தாமாக விடை கூறுகின்றனர் என்று மதிப்பிடுங்கள்.

## மீதியை வரைந்து நிறம் கொடுங்கள்

நோக்கம் :

- ☸ நுண் தசைப் பயிற்சி

❁ எழுத்து முன் பயிற்சி

பாடப்பகுதியிலுள்ள இச்செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்யட்டும். பொருத்தமான நிறம் நல்கட்டும்.

**சார்ட் 4**

அம்மா நெய்யப்பம் செய்தாள்.

எலிக்கு ஒன்றுகூட கிடைக்கவில்லை.

1. அம்மா செய்த பலகாரம் என்ன?
2. எலிக்கு நெய்யப்பம் கிடைத்ததா?

## நிகழ்வு - 5
## குமரனின் குறும்புகள் - (கணக்கு)

**நுழைவுச் செயல்பாடுகள்**
**விலங்கரசன்**
*கலந்துரையாடல்*



நோக்கம்:

❁ தொகுப்பு என்ற கருத்துருவாதல்

கீழ்க்காணும் கதையோட்டத்தைச் சுவைபடச் சொல்லுங்கள்.

"ஒரு காட்டில் பல விலங்குகளும் பறவைகளும் வாழ்ந்து வந்தன. காட்டில் உள்ள உணவை உண்டு மகிழ்ச்சியாக இருந்தன" என்று சொல்லிக் கீழ்க்காணும் வினாக்களைக் கேளுங்கள்.

- காட்டில் என்னென்ன மிருகங்கள் இருக்கும்?
- என்னென்ன பறவைகள் இருக்கும்?
- காட்டில் அதிகமாக இருப்பது மிருகங்களா? பறவைகளா?

"ஒரு நாள் காட்டுராஜாவான சிங்கம் இந்தக் காட்டிற்கு வந்தது. சிங்கத்தைப் பார்த்த மிருகங்களும் பறவைகளும் ஓடி ஒளிந்தன."

- மிருகங்களும் பறவைகளும் ஓடி ஒளிந்ததேன்?
- எங்கு ஓடியிருக்கும்?
- எவையெவை ஓடியிருக்கும்?

" முயல்கள் எல்லாம் சேர்ந்தன. கூட்டமாக ஓடின. மான்கள்

எல்லாம் சேர்ந்தன. கூட்டமாக ஓடின. காகங்கள் ஒன்று சேர்ந்தன. வேகமாகப் பறந்தோடின. ஒரேயொரு மான் மட்டும் சிங்கத்திடம் மாட்டிக் கொண்டது.



" சிங்கராசா என்னைக் கொல்லாதீங்க!" மான் மன்றாடியது", எனக்கொரு குட்டி இருக்கிறது. அது அனாதையாகிப் போகும்!" மான் அழுது கெஞ்சியது.
"எனக்குப் பசிக்கிறது. உன்னைச் சாப்பிடப் போகிறேன்" சிங்கம் சொன்னது.
"என் குட்டிக்குப் பால் கொடுத்துவிட்டு வருகிறேன். அது வரை யாவது பொறுத்துக் கொள்ளுங்கள்" மான் பணிவாகக் கேட்டது. சிங்கம் சம்மதித்தது. சற்று நேரத்தில் மான் திரும்பி வந்தது. " இனி என்னைச் சாப்பிட்டுக் கொள்" மான் சொன்னது. ஆனால் சிங்கம் மானைத் தின்னவில்லை. "உன்னைச் சாப்பிட்டால் உன் குட்டி அனாதையாகிவிடும். நான் போகிறேன்" என்று சொல்லி சிங்கம் போய்விட்டது. மற்ற விலங்குகளும் பறவைகளும் மானிடம் ஓடி வந்தன.

*நடிப்பு*

இக்கதையை நடிக்கலாம்.
யார் யார் மான்கள்? முயல்களாக யார் யார் நடிக்கலாம்? சிங்கம் யார்? குழுவாகட்டும். நடித்துக் காட்டட்டும்.

*புதையலைத் தேடி*



வகுப்பின் பல இடங்களில் கற்கள், விதைகள்... போன்றவற்றின் தொகுப்புகளை ஒளித்து வையுங்கள். நீங்கள் குறிப்பிடும் குழந்தை நீங்கள் கூறும் தொகுப்பை எடுத்துவர வாய்ப்பளியுங்கள்.

*சிறிதாக்கலாம்.. பெரிதாக்கலாம்*

இரண்டு தொகுப்புகளைக் காட்டுங்கள்.

- இவற்றுள் பெரிய தொகுப்பு எது?
- சிறிய தொகுப்பை எப்படிப் பெரிதாக்கலாம்?
- மேலும் பெரியதாக்க என்ன செய்யணும்?
- பெரிய தொகுப்பைச் சிறிதாக்க என்ன செய்யணும்?

போன்ற வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடியபின்,

- கீழ்க்காண்பது போல் பைகளில் விதைகள் இடுங்கள்.



- குழந்தைகள் 3 பேர் அடங்கிய குழுவாகட்டும்.
- குழுக்களுக்களுக்கு கற்கள், விதைகள்... போன்ற வேறு பொருட்களைக் கொடுங்கள்.

குழுக்கள் நீங்கள் உருவாக்கியது போல் தொகுப்புகள் உருவாக் கட்டும்.

எல்லாக் குழுக்களும் இவ்வாறு தொகுப்புகள் உருவாக்கிய பின், இரண்டு குழந்தைகளை வகுப்பிற்கு வெளியே நிற்குமாறு செய் யுங்கள்.

“உங்களிடம் உள்ளவை மிட்டாய்த் தொகுப்புகள் என்று வைத்துக் கொள்வோம். இப்போது நம் வகுப்பிற்கு இரண்டு விருந்தினர்கள் வரப்போகிறார்கள். அவர்களுக்கு உங்களிட முள்ள மிட்டாய்களைக் கொடுக்க வேண்டும். அளவாகக் கொடுக்க வேண்டும். அதிகமாகக் கொடுக்கக் கூடாது!” என்று சொல்லி தங்களிடமுள்ள இரண்டு மிட்டாய்களைக் கொடுக்க வாய்ப்பளியுங்கள்.

அவர்கள் கொடுத்த இரண்டு பொருட்களின் படங்களைக் கரும் பலகையில் வரைந்து , எண் எழுதுங்கள்.

**ஆசிரியர் கவனத்திற்கு...**

ஒரே எண்ணிக்கயுள்ள பல்வேறு பொருட்களின் தொகுப்புகளைக் கண்டுபிடித்து (1 முதல் 5 வரை) எண்கள் எழுத வாய்ப்பளிக்க வேண்டும். ஸ்டாம் இட் பயன் படுத்தி இத்தகைய எண்ணிக்கை வரும்படி அச்சடித்துக் கொடுக்கலாம்.

## கதையோட்டம்

ஆர்வமூட்டும் விதத்தில் நிகழ்வு ஒன்று முதல் நான்கு வரையுள்ள கதைச் சுருக்கத்தைக் கூறிய பின் நிகழ்வு 5 -இன் கதையோட்டத்தைக் கூறுங்கள். அதன் இறுதியில் கீழ்க்காணும் வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

- குமரனும் நண்பர்களும் என்ன விளையாடினார்கள் தெரியுமா?

என்று கேட்டுக் குழந்தைகள் கூறும் விளையாட்டுக்களைச் சார்ட்டில் எழுதுங்கள்.

## வாருங்கள் விளையாடலாம்

நோக்கம் :

- விளையாட்டில் ஈடுபடுதல்
- எண்ணறிவு

குமரனும் நண்பர்களும் விளையாடிய விளையாட்டை நாமும் விளையாடலாம் என்று கூறி குழந்தைகளை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் செல்லுங்கள்.

- எல்லாக் குழந்தைகளும் நிற்பதற்கேற்ப தரையில் வட்டம் வரையுங்கள்.

- அவ்வட்டத்தைச் சுற்றிக் குழந்தைகள் மெல்ல ஓடட்டும்.
- அப்படி ஓடிக்கொண்டிருக்கும் போது நீங்கள் கூறும் எண்ணிற்கேற்பக் குழுவாக வேண்டும்.
- அவ்வாறு குழுவில் சேராமல் நிற்பவர் அவுட்.
- குழுவாக 1 முதல் 5 வரை எண்களைப் பயன்படுத்துங்கள்.



## வகுப்பறையில்...

நோக்கம் :

- ☸ பட வாசிப்பு

குமரன் விளையாடிய விளையாட்டை விளையாடினோம். இனி குமரனைப் பார்க்க வேண்டாமா? எனக் கேட்டுக் கணிதப் புத்தகத்தைப் பார்க்க வாய்ப்பளியுங்கள். கணிதப் புத்தகத்தில் அலகு 2 இல் உள்ள பக்கம் 16 ஐப் பார்க்கச் சொல்லுங்கள்.

- இது யாருடைய வீடு?
- குமரன் எங்கிருக்கிறான்?
- படத்தில் வேறு என்னென்ன உள்ளன?

போன்ற வினாக்கள் கேட்டுக் குழந்தைகளுடன் உரையாடுங்கள். குழந்தைகள் படத்தை நன்றாக உற்றுக் கவனித்து விடையளிக்கட்டும்.

## எத்தனை எத்தனை குழுக்கள்?

நோக்கம் :

- ☸ படவாசிப்பு
- ☸ 1 முதல் 5 வரை எண்ணுதல்; சொல்லுதல்



“குருவிகள் குருவிகள் எத்தனை ? ”

என்று கேளுங்கள்.

“குருவிகள் நாங்கள் இரண்டு”

என்று குழந்தைகள் கூறட்டும். தொடர்ந்து,

“ஆடுகள் ஆடுகள் எத்தனை?”

“ஆடுகள் நாங்கள் மூன்று. ”

“.......................................................................................................

.......................................................................................................”

.“.....................................................................................................

.......................................................................................................”

## எண்ணி எண்ணி எண்ணைச் சொல்லு

நோக்கம் :

- 1 முதல் 5 வரையுள்ள பொருள்களை எண்ணி எடுத்தல்.

கற்கள், புளிய விதைகள், குச்சிகள் போன்றவற்றை உங்கள் வகுப்பறை குழந்தைகளின் எண்ணிக்கைக் கேற்பச் சேகரித்துக் கொள்ளுங்கள்.

இச்செயல்பாட்டைக் குழுச் செயல்பாடாகவும் நடத்தலாம்.

1 முதல் 5 வரையுள்ள எண்களுள் நீங்கள் கூறும் எண்ணிற்கேற்பக் குழந்தைகள் பொருள்களை எண்ணி எடுத்துக் காட்ட வாய்ப்பளியுங்கள்.

## கதையோட்டம்

"குமரன் விளையாடிக் கொண்டிருந்தான். குருவிக் கூட்டைப் பார்த்தான். "ஹாய் குருவிக் கூடு" என்று சொல்லிக் கொண்டே மரத்தின் மேலேறினான். "இங்கு ஏதோ நடக்கப் போகிறது" எலி குமரனை விட்டுக் கண்களை அகற்றாமல் பார்த்துக் கொண்டு நின்றது.

அப்போது என்ன நடந்தது தெரியுமா?"

எனக் கேளுங்கள். குழந்தைகள் சொல்லட்டும்.

ஒன்று யாவர்க்கும் தலை ஒன்று
இரண்டு முகத்தின் கண் இரண்டு
மூன்று முக்காலிக்குக் கால் மூன்று
நான்கு நாற்காலியின் கால் நான்கு
ஐந்து ஒரு கை விரல் ஐந்து

## குமரனின் குறும்பு

நோக்கம்:

- 1 முதல் 5 வரை எண்ணுதல்
- பட வாசிப்பு
- எண்ணுரு அறிமுகம்

அதன்பின் கணிதப் புத்தகத்தில் பக்கம் 17, 18 ஐப் பார்க்கட்டும். படத்தின் அடிப்படையில்,

- படம் 1-ல் எத்தனை குருவிகள் உள்ளன?
- படம் 2 -ல் என்ன இருக்கிறது?
- படம் 3 - ல் குருவிக் கூட்டில் எத்தனை முட்டைகள் உள்ளன?
- படம் 4 ல் எத்தனைக் குருவிக் குஞ்சுகள் உள்ளன?
- படம் 5 -ல் நெற் கதிர்கள் எத்தனை?
- படம் 6- ல் எத்தனை குழந்தைகள் உள்ளனர்?

- குமரன் ஏன் மரத்தில் ஏறினான்?
- மரத்தில் ஏறும் குமரனைப் பார்த்த குருவி என்ன செய்தது?
- குமரனுக்கு என்ன நேர்ந்தது?

போன்ற வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

குழந்தைகள் கூறக் கூற படம் வரைந்து அதற்கு நேராக எண்ணுருக்களை எழுதுங்கள்.

- எண்கள் எழுதுவதைக் குழந்தைகள் பார்க்கும்படி எழுதுங்கள்.
- குருவிக் கூடு ஒன்று எனச் சொல்லி 1 என்ற எண்ணுருவைத் தொட்டுக் காட்டுங்கள்.
- கட்டியவர் இரண்டு - 2
- போட்ட முட்டை மூன்று - 3

இவ்வாறு சொல்லிக் கொண்டே எண்களைத் தொட்டுக் காட்டுங்கள்.

## எண்ணி நீயும் சொல்லு

நோக்கம்:

- எண்ணுதல்
- பாடல் பாடுதல்

1, 2, 3, 4, 5 எண்ணிக்கையுள்ள பொருள்களை சேகரித்துக் கொள்ளுங்கள்.

அவற்றுள் ஒரு பொருளை எடுத்துக் காட்டி,

**"எண்ணு எண்ணு எண்ணு**
**எண்ணி நீயும் சொல்லு - என்**
**கையிலிருப்பது எத்தனை என்று**
**எண்ணி நீயும் சொல்லு!"**

என்று இராகத்தோடு பாடிக் கேளுங்கள்.

குழந்தைகள் கையிலிருப்பதை எண்ணி

**"ஒன்று ஒன்று ஒன்று**
**உங்கள் கையிலிருப்பது ஒன்று"**

என்று பதில் பாட்டுப் பாடட்டும்.

**கவனிக்க**

- 1 முதல் 5 வரையுள்ள எண்களுள் பெரியது எது?
- சிறியது எது?
- கூடுதல் எது?
- குறைவு எது?

போன்ற செயல்பாடுகளைத் தக்க தருணத்தில் நல்க வேண்டும்.

## பாட்டுப் பாடுவோம்

நோக்கம்:

- பாடல் பாடுதல்
- தன்னைச் சுற்றியுள்ள எண்களை அறிதல்

கணிதப் பாடத்திலுள்ள பாடலை இராகத்தோடுப் பாடிக் காட்டுங்கள். குழந்தைகள் செய்கைப் பாடலாகக் கூற வாய்ப்பளியுங்கள்.

**“எண்ணு எண்ணு எண்ணு**
**எண்ணி நீயும் சொல்லு - என்**
**கையிலிருப்பது எத்தனை என்று**
**எண்ணி நீயும் சொல்லு!**

**ஒன்று ஒன்று ஒன்று**
**உங்கள் கையிலிருப்பது ஒன்று.**

**எண்ணு எண்ணு எண்ணு**
**எண்ணி நீயும் சொல்லு - என்**
**கையிலிருப்பது எத்தனை என்று**
**எண்ணி நீயும் சொல்லு!**

**இரண்டு இரண்டு இரண்டு**
**உங்கள் கையிலிருப்பது இரண்டு.”**

| | |
|---|---|
| ஒன்று | 1 |
| இரண்டு | 2 |
| மூன்று | 3 |
| நான்கு | 4 |
| ஐந்து | 5 |

## கதையோட்டம்

“குமரனும் நண்பர்களும் பூந்தோட்டத்திற்குச் சென்றனர். எலியும் அவர்களைத் தொடர்ந்தது. வீடு கட்ட ஆலோசனை சொல்லக் கூடிய யாராவது அப் பூந்தோட்டத்தில் இருப்பார் களல்லவா!

குமரனும் நண்பர்களும் போன பூந்தோட்டத்தை நாமும் பார்க்க வேண்டாமா? வாருங்கள் பார்க்கலாம். ”

என்று சொல்லி கணிதப் பகுதிக்குள் செல்லுங்கள்.

## பூந்தோட்டத்திற்குச் செல்வோம்

நோக்கம்:

- எண்ணுதல்

- குமரன் எங்கிருக்கிறான்?
- குமரனும் நண்பர்களும் எத்தனை பேர்?

- அவர்களின் அருகேயுள்ள தொப்பியை ஒவ்வொரு வரும் எடுத்து அணிந்தால் தொப்பி போதுமா?
- அவர்கள் ஏன் பூந்தோட்டத்திற்குச் சென்றார்கள்?

போன்ற கேள்விகளைக் கேட்டுக் குழந்தைகளுடன் உரையாடுங்கள்.

## ஒரே எண்ணிக்கை ஒரே நிறம்

நோக்கம்:

- எண்ணிக்கையின் அடிப்படையில் குழு வாக்குதல்

படத்திலுள்ள பூக்களில் ஒரேபோல் எண்ணிக்கையுள்ளவற் றிற்கு ஒரே நிறம் கொடுத்துப் பூந்தோட்டத்தைக் குழந்தைகள் வண்ணமயமாக்கட்டும்.

தொடர்ந்து,

- என்னென்ன பூக்கள் உள்ளன?
- ஒவ்வொரு பூவும் எத்தனை உள்ளன?

முதல் வினாவைக் கேட்டுப் பூக்களைப் பட்டியலிடுங்கள்.

இரண்டாம் வினாவிற்குக் கூறும் பதில்களை ஆங்காங்கே எழுதுங்கள்.

- இந்தப் பூ எத்தனையுள்ளது?

என்று கேட்டுப் பூவையும் எண்ணையும் இணைத்துக் கோடிழுக்கத் தூண்டுங்கள்.

## பூந்தோட்ட நண்பர்கள்

நோக்கம் :

- எண்ணுதல்
- எண்ணிக்கைக்கேற்ப பொட்டு வரைதல்

“பூந்தோட்டத்தில் எலி சந்தித்த சில நண்பர்கள் இங்குள்ளனர். அவர்கள் எத்தனை போர் என்று எண்ணிப் பார்த்துப் பொட்டு வரையுங்கள்”

என்று சொல்லிக் குழந்தைகள் தாமாக இச் செயல்பாட்டைச் செய்யத் தூண்டுங்கள்.

## கதையோட்டம்

“எலி தான் சந்தித்த நண்பர்களுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தது. திரும்பிப் பூந்தோட்டத்திற்கு வந்தது. அப்போது

பூந்தோட்டத்தில் அனைவரும் இருந்தனர். குமரனை மட்டும் காணவில்லை. எலி குமரனைத் தேடியது. தூரத்தில் 'இரண்டு என்ற சத்தம் கேட்டது. சத்தம் கேட்ட இடத்திற்கு ஓடியது. குமரனின் நண்பர்கள் இரண்டு பூக்களைப் பறித்து ஓடி வந்து குமரனிடம் கொடுப்பதைப் பார்த்தது. ஓ… விளையாடுகிறார்களா? எலி நினைத்தது."




## எண்ணிப் பூக்கள் கொண்டு வா

நோக்கம்:

☸ கணிதப்பாடல் பாடுதல்

"குமரன் விளையாடிய விளையாட்டை நாம் பாடலாகப் பாடுவோமா?"

எனக் கூறிப் பாடலை அறிமுகம் செய்யுங்கள்.

- குழந்தைகள் பாடலை மெட்டமைத்துப் பாடத் தூண்டுங்கள்.
- வாசிப்பு உத்திகள் பயன்படுத்தி பலமுறை பாட வாய்ப்பளியுங்கள்.
- ஒன்று , இரண்டு, மூன்று , நான்கு, ஐந்து என்ற சொற்களை வட்டமிடத் தூண்டுங்கள்.




## நானே கூறுவேன்

நோக்கம்:

☸ எண்ணுருவும் எழுத்துருவும் அறிதல்

வட்டமிட்ட சொற்களைக் குழந்தைகள் கூறக் கரும்பலகை/சார்ட்டில் கீழ்க்கண்டவாறு எழுதுங்கள். ஒவ்வொரு சொல்லாகத் தொட்டு குழந்தைகள் வாசிக்க வாய்ப்பளியுங்கள்.

மேலும்,

மின்னலட்டைகளைப் பயன்படுத்தி எண்ணுருவையும் எழுத்தையும் பொருத்தும் செயல்பாடுகள் நல்கலாம்.

## கதையோட்டம்

"குமரனும் நண்பர்களும் விளையாடிக் களைத்துப் போயினர். ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்தனர். தங்களுக்குத் தேவையான மாம்பழங்களைப் பறித்தனர். பங்கிட்டுத் தின்றனர்."

## மாமரத்தின் நண்பர்கள்

நோக்கம்:

☸ 1 முதல் 5 வரை எண்ணறிவு உறுதிப்படுத்துதல்




- குமரனும் நண்பர்களும் சேர்ந்து எத்தனை பேர்?
- அவர்ளுக்கு எத்தனை மாம்பழங்கள் வேண்டும்? என்று கேளுங்கள்.
- அவர்களுக்கு 5 மாம்பழங்கள் கிடைத்ததெனில் எப்படிப் பங்கிடுவார்கள்?

பொருள்களைப் பயன்படுத்தி விளக்குங்கள்.

## எண் விளக்கம்

நோக்கம் :

☸ எண்களை பலமுறைகளில் விளக்குதல்.

1 –1

2 – 1+1

3 – 1+1+1 , 2+1

4 – 3+1. 2+2. 2+1+1, 1+1+1+1

5 – 4+1, 3+2, 2+2+1, 2+1+1+1, 1+1+1+1+1




எண்களைப் பல முறைகளில் பிரிக்க முடியும் என்ற கருத்தையும் குழந்தைகளுக்குக் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். அதற்கு புளிய விதைகள், கற்கள், குச்சிகள் போன்றவற்றைப் பயன்படுத்துங்கள்.

## நானே கண்டுபிடிப்பேன்

நோக்கம்:

☸ கற்ற கருத்துகளைப் பயன்படுத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்

பக்கம் 24 முதல் 27 வரையுள்ள செயல்பாடுகளைக் குழந்தைகள் தாமாக வீட்டிலிருந்து செய்யட்டும். அவற்றை மதிப்பீடு செய்ய வேண்டும்.

# நிகழ்வு - 6
# குருவிகளே குருவிகளே

| | | |
|---|---|---|
| மனிதன் | - | வீடு |
| குருவி | - | கூடு |
| சிலந்தி | - | வலை |
| சிங்கம் | - | குகை |
| நாய் | - | கூடு |
| பசு | - | தொழுவம் |
| எலி | - | வளை |

## கதையோட்டம்

ஆர்வமூட்டும் விதத்தில் நிகழ்வு 5 வரையுள்ள கதைச் சுருக்கத்தைக் கூறிய பின் நிகழ்வு 6 இன் கதையோட்டத்தைக் கூறுங்கள். அதன் இறுதியில் கீழ்க்காணும் கேள்விகளைக் கேளுங்கள்.

- ♦ எலி யாரிடமெல்லாம் பேசியது?
- ♦ என்ன பேசியிருக்கும்?
- ♦ எலிக்கு வீடு கட்டுவதற்கான ஆலோசனை கிடைத்ததா?

போன்ற வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள். குழந்தைகள் கூறுவதில் தேவையானவற்றை மட்டும் கரும் பலகையில் எழுதுங்கள். பொருத்தமான சூழலில் அதைப் பயன்படுத்துங்கள்.

- ♦ எலி யாரிடமெல்லாம் பேசியது?
- ♦ என்ன பேசியிருக்கும்?
- ♦ நீங்கள் கூறியது சரிதானா என்று பார்ப்போமா?

எனக் கூறிப் பாடப் பகுதிக்குள் நுழையுங்கள்.

## பட வாசிப்பு




நோக்கம் :

- ☸ படங்களைப் பார்த்துக் கருத்தை ஊகித்துக் கூறுதல்

குழந்தைகள் படத்தைப் பார்க்கப் போதுமான அவகாசம் கொடுங்கள்.

- ♦ படத்தில் என்னென்ன உள்ளன?
- ♦ எலி யாரிடமெல்லாம் பேசியிருக்கும்?
- ♦ என்ன பேசியிருக்கும்?

போன்ற வினாக்கள் கேட்டுப் பட வாசிப்பை ஆழமானதாக மாற்றுங்கள்.

## குருவிகளே... குருவிகளே...

நோக்கம்:

- ☸ பாடலை இசையோடு தனியாகவும் குழுவாகவும் பாடுதல்.

- நான் சொன்ன கருத்து பாடலில் இடம் பெற்றுள்ளதா என்று தேடல் நடத்தட்டும். (ஊகமாக வாசிக்கட்டும்)
- "நான் பாடுகிறேன். நீங்கள் கூறியது உள்ளதா என்று கவனியுங்கள்" என்று கூறிப் பாடலை ஓரிரு முறை பாடுங்கள்.
- குழந்தைகள் தனியாகவும் குழுவாகவும் புதிய மெட்டமைத்துப் பாடட்டும்.
- **படத்திலுள்ள கணிதத்திற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்த மறந்துவிடாதீர்கள்.**




## உரையாடுங்கள்

நோக்கம் :

☸ தன் கருத்தைக் கூறிக் கலந்துரையாடலில் பங்கேற்றல்

- எலி வேறு யாரிடமெல்லாம் விசாரித்திருக்கும்?
- அவர்கள் என்ன சொல்லியிருப்பார்கள்?

போன்ற வினாக்களை எழுப்பிக் கலந்துரையாடுங்கள். குழந்தைகள் கூறுவதைச் சார்ட்டில் எழுதுங்கள்.

## பாடல் வரிகள் சேர்த்தல்

நோக்கம் :

☸ பாடல் வரிகள் உருவாக்கிக் கூறுதல்

சார்ட்டில் பட்டியலிட்ட பறவைகள் , பிராணிகள் ஆகியவற்றிடம் கேட்பது போல் , அதற்கு அவை பதிலளிப்பது போல் கூற வாய்ப்பளியுங்கள். குழந்தைகள் உருவாக்கிய வரிகளைச் சார்ட்டில் எழுதுங்கள். பாடப்பகுதியிலுள்ள பாடலுடன் தாங்கள் உருவாக்கிய வரிகளையும் சேர்த்துப் பாட வாய்ப்பளியுங்கள்.

........................................ ............................ எங்கே போறீங்க?

........................................ ............................ சேர்க்கப் போகிறோம்.

## அவரவர் வீடு - சொல்லுங்கள்; இணையுங்கள்

நோக்கம் :

☸ மொழி விளையாட்டுகளில் ஈடுபடுதல்

சில உயிரினங்களின் படங்களை ஒட்டிப் பட அட்டைகள் தயார் செய்யுங்கள். அவற்றை மேசை மீது கவிழ்த்து வையுங்கள். குழந்தைகள் சற்றுத் தொலைவில் வரிசையாக நிற்கட்டும்.

“நான் ஒன்று முதல் ஐந்து வரை எண்ணுவேன். நான் ஐந்து என்று சொன்னவுடன் ஓடிச் சென்று ஒரு அட்டையை எடுக்க வேண்டும். உங்களுக்குக் கிடைத்த படம் எதுவோ அதன் வீடு எது என்று சொல்ல வேண்டும்.” என்று அறிவுறுத்தி விளையாட்டை நடத்துங்கள்.

குழந்தைகள் சொல்லச் சொல்லச் சார்ட்டில் எழுத வேண்டும். வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி அவற்றை வாசிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

அதன் பின் பாடப்பகுதியிலுள்ள செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்யட்டும்.

பலவகையான வீடுகள், கூடுகளின் படங்களைச் சேகரித்துப் **படத் தொகுப்பும்** தயாரிக்கலாம்.

## *நானே வாசிப்பேன்*

நோக்கம்:

- கற்ற எழுத்துகள், சொற்கள் இடம் பெற்றுள்ள புதிய வாசிப்புப் பகுதியை வாசித்தல்

இப்பகுதியை குழந்தைகள் தாமாக வாசிக்கச் சொல்லவேண்டும். அவர்கள் எந்தெந்தச் சொற்களைச் சுலபமாக வாசிக்கின்றனர். எந்தெந்தச் சொற்களை வாசிக்கச் சிரமப்படுகிறார்கள், எந்தெந்த எழுத்துக்களை வாசிக்க இயலவில்லை என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். இவ்வாறு கவனித்து மதிப்பிடுவதோடு நின்றுவிடாமல் அந்தக் குழந்தைகளுக்கு **மாற்றுச் செயல்பாடுகள் அல்லது கூடுதல் செயல்பாடுகள்** நல்கி அச் சொற்களை, எழுத்துகளை உறுதிப்படுத்த ஆவன செய்ய வேண்டும்.

### இது என்ன வீடு? எழுதுங்கள்; இணையுங்கள்

நோக்கம்:

- கற்ற சொல்லைப் பொருத்தமான சூழலில் பயன் படுத்துதல்.
- பலவகையான வீடுகளைப் பட்டியலிடுதல்

வீடு என்ற சொல்லைக் குழந்தைகள் பல முறை இனம் கண்டுள்ளார்கள். எனவே படவாசிப்பு நடத்திய பின் குழந்தைகள் அச் சொல்லைத் தாமாக எழுத வேண்டும். எழுதிய பின் சரியானவற்றிற்கு நேராகக் கோடிட்டு இணைக்க வேண்டும். இச்செயல் பாட்டின் வாயிலாக இச் சொல்லை இனம் கண்டு எழுதுவதோடு

தட்டு.. தட்டு... கை தட்டு
குமார் தம்பி கை தட்டு
கட்டு.. கட்டு... கை கட்டு
அகிலாப் பாப்பா கை கட்டு

அல்லாமல் பல வகையான வீடுகளைப் பற்றியும் அறிந்துள் ளனர் என்பதையும் மதிப்பீடு செய்ய வேண்டும்.

### விடுபட்டதை நிரப்புங்கள்

நோக்கம்:

- குறில் நெடில் வேறுபாடு அறிதல்.
- ஒலித் துணைக் குறியீடுகளை நினைவு கூர்ந்து எழுதுதல்.

ஓசை மாறுபடும் பொழுது எழுத்திலும் வேறுபாடு ஏற்படுகிறது என்பதை அறிந்து சொற்கள் உருவாக்கும் செயல்பாடே இது. இங்கு குழந்தை இனம் கண்டு எழுதுகிறானா என்பதை மதிப்பிட வேண்டும்.

### முழுமைப்படுத்துங்கள்; பாடுங்கள்

நோக்கம்:

- பாடல் வரிகளைச் சேர்த்தல்

இப்பாடலை வகுப்பறையில் இராகத்துடன் செய்கைப் பாட லாகப் பாடுங்கள். இதைப் பாடும் பொழுது வகுப்பறையிலுள்ள சில குழந்தைகளின் பெயர்களையும் இணைத்துக் கொள்ளுங் கள்.

"நான் யார் பெயரைக் கூறுகிறேனோ அவர்கள் இது போலச் செய்ய வேண்டும்" எனக் கூறி செய்கைப் பாடலைத் தொடருங் கள்.

இது முழுமையாக இதுவரை கற்ற எழுத்துகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட பாடலாகும். குழந்தைகள் இதைத் தானாகவே பாட வேண்டும். மட்டுமன்றி தரப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்திப் பாடலை முழுமைப் படுத்திப் பாட வேண்டும்.

### நானே பாடுவேன்

நோக்கம்:

- கற்ற எழுத்துகள் பயன்படுத்தி உருவாக்கப் பட்டப் பாடலைத் தானாகப் பாடுதல்

கற்ற எழுத்துகள் மட்டும் பயன்படுத்தி உருவான பாடலிது. எல்லா எழுத்துகளையும் குழந்தைகள் இனம் கண்டிருந்தால் இப்பாடலை அவர்களாவே பாட முடியும். அவசரப்படாமல் குழந்தைகள் தாமாகச் சொற்களை இனம் கண்டு பாட போதுமான கால அவகாசம் கொடுங்கள்.

ஒன்று ஒரு தோசை
தின்று பார்க்க ஆசை

இரண்டு காளை வண்டி
காளை இரண்டும் சண்டி

மூன்று இட்லி தந்தால்
மூக்குப் பிடிக்கத் தின்பேன்

நான்கு பேர்கள் தம்பி
நல்ல தங்கக் கம்பி

ஐந்து விரல் கையில்
அழகாய் விடு பையில்

ஆறு படகில் ஏறு
ஐயோ அடியில் சேறு

ஏழு நாட்கள் வாரமே
எங்கே பெயரைக் கூறு

எட்டு வேண்டும் லட்டு
தட்டிலிருந்து கொட்டு

ஒன்பது பேர் சேர்ந்து
ஓட்டைப் பானை செய்தனர்

பத்து தயிர் மத்து
பாட்டி விட்டாள் குத்து

## இரண்டு குழுக்களாக்குங்கள்

நோக்கம் :

- அகர வரிசைப்படிக் குழுக்களாக்குதல்

அ, ஆ என்ற அகர வரிசையில் சொற்களை குழுக்களாக்க வேண்டும். இச்செயல்பாட்டை வீட்டுச் செயல்பாடகக் கொடுங்கள். குழந்தைகள் தாமாகச் செய்துள்ளார்களா என்பதை மதிப்பிடுங்கள்.

**சார்ட் 5**

மீண்டும் நல்ல வீடு கட்ட நினைத்தது.

குருவி, தேனீக்கள், எறும்புகளிடம் விசாரித்தது.

வளை தான் என் வீடு.

1. வீடு இல்லாத எலி என்ன நினைத்தது?
2. யாரிடமெல்லாம் வீட்டைப் பற்றி விசாரித்தது?
3. இறுதியில் எலி என்ன நினைத்தது?

### அழிக்க அழிக்க எழுதட்டும்

நீங்கள் சொல்லும் கதை/ பாடல்களில் இடம் பெறும் முக்கிய சொற்களை கரும்பலகையில் எழுதுங்கள். அவற்றை ஒன்றோ இரண்டோ முறை வாசித்துக் காட்டுங்கள். என்னென்ன சொற்கள் எழுதியுள்ளேன் என்று ஒரு முறை: எத்தனை சொற்கள் எழுதியுள்ளேன் என இரண்டாவது முறை வாசித்துக் காட்டுங்கள். தேவையெனில் வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி மேலும் வாசித்துக் காட்டுங்கள்.

"இனி நீங்கள் வாசிக்க வேண்டும். ஆனால் ஒரு நிபந்தனை. நான் ஒவ்வொரு சொல்லாக அழிப்பேன். நீங்கள் அழித்த சொற்களையும் சேர்த்து எழுதிய எல்லா சொற்களையும் வாசிக்க வேண்டும்" என்று சொல்லி ஒவ்வொரு சொல்லாக அழித்துக் கொண்டே வாருங்கள். குழந்தைகள் எவ்வளவு அருமையாக அனைத்துச் சொற்களையும் வாசிக்கிறார்கள் என்று கண்டு அதிசயித்துப் போவீர்கள்.

வேறொரு சந்தர்பத்தில் இதே உத்தியைப் பயன்படுத்தி அழிக்க அழிக்க அழிக்கும் சொற்களை எழுதச் சொல்லுங்கள். சாதாரண குழந்தை கூட கவனமாக எழுதியுள்ளதைக் கவனிக்கும். அனைத்தும் 'சரி' வாங்கும்.

## படைப்புப் தொகுப்பில்... (Portfolio)

### தமிழ்

பக்கம் 27 படம் வரைதல்
கண்டுபிடியுங்கள்
பக்கம் 30 அடுத்தது என்ன? எழுதுங்கள்
பக்கம் 34 மீதியை வரைந்து நிறம் கொடுங்கள்
பக்கம் 37 விடுபட்டதை நிரப்புங்கள்
பக்கம் 38 பாடலை முழுமைப்படுத்துங்கள்
பக்கம் 39 இரண்டு குழுக்களாக்குங்கள்

### சூழ்நிலையியல்

பக்கம் 24 இவர்கள் வசிப்பது எங்கே?
பக்கம் 31 எந்தப் பொருள் ? எந்த அறை? (படங்களைச் சேகரித்து ஒட்டுதல்)
பக்கம் 34 வீட்டிலுள்ளவர்களின் வேலைகள்
பக்கம் 35 அவரவர் வீடு (செயல் திட்டம்)
பக்கம் 37 பலதர வீடுகள்

### கணிதம்

பக்கம் 21 பூந்தோட்ட நண்பர்கள் (பாடப் பகுதியிலுள்ளதைப் போன்று வேறு செயல்பாடுகள்)
பக்கம் 20 நிறம் கொடுத்தல்
பக்கம் 24 பொருத்துதல்
பக்கம் 25 எண்களை எழுதுதல்
பக்கம் 26 சரி பார்ப்போம்
பக்கம் 27 படமும் எண்ணும்

# பயிற்சித்தாள்

1. எண்ணிக்கைக் கேற்ப எண்களை எழுது.











2. படத்தைப் பார்; பெயர் எழுது.







3. வாசித்தல்

ஆடு பாமா ஆடு; ஆடிப் பாடு.

பாப்பா... பாப்பா... ; பாட்டுப் பாடு.

தாத்தா வீட்டுக் கதவை அடை

4. ‘ டை ’ என்ற எழுத்தில் முடியும் ஐந்து சொற்களை எழுது.

5. உரையாடல்.

உனது வீட்டைப்பற்றியும் வீட்டிலுள்ளவர்களைப் பற்றியும் ஐந்து வாக்கியங்கள் கூறு.

6. குழுவில் சேராதது எது? வட்டமிடுங்கள்.

அலை, ஆலை, ஆமை, ஆடை

அம்மி, தட்டு, பானை, கட்டில்

7. அடுத்தது என்ன? எழுதுங்கள்.

பல், பால் – கல், --------

அடை, ஆடை - அமை, ----------

பசி, ---------- - வசி, ----------------

8. பாடலை முழுமைப்படுத்துங்கள்.

அப்பா அப்பா வா வா

அழகு பொம்மை தா தா

---- --------- --- ------

அன்பு முத்தம் ------ ---.